Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

13.04.2020 077 316 5555 திங்கட்கிழமை


## 136 கிலோ கஞ்சா மீட்பு

*மூவர் கைது*

யாழ்ப்பாணம்,ஏப்.13
பருத்தித்துறைக் கடற்பரப்பில் 136 கிலோ கஞ்சாவுடன் மூவர் இன்று காலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பக்.2

# ஜூன் இறுதியில் தேர்தல்?



## தேர்தல் ஆணைக்குழு பரிசீலனை

கொழும்பு.ஏப்.13
நாடாளுமன்றத் தேர்தலை ஜூன் மாதத்தின் இறுதிப் பகுதியில் நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு பரிசீலித்து வருகின்றது என்று அரசியல் கட்சி வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

பக்.2

## கொரோனா 214

கொழும்பு,ஏப்.13
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 4 பேர் இன்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 210 இலிருந்து 214 ஆக உயர்ந்துள்ளது. (சு-22)

## வீட்டிலிருந்து பணிபுரியும் காலம் நீடிப்பு

கொழும்பு,ஏப்.13
வீட்டில் இருந்து பணிபுரியும் காலம் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.
அரச மற்றும் தனியார் துறையினருக்கு இந்த வாய்ப்பு

பக்.2



## மீண்டது தாவடி

யாழ்ப்பாணம்,ஏப்.13
யாழ்ப்பாணத்தில் முதலாவதாக அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளியின் கிராமமான தாவடி இன்று காலை பாதுகாப்புத் தரப்பினரின் கண்காணிப்பில் இருந்து முற்றாக விடுவிக்கப்பட்டது. இந்தக் கிராமம் 3 வாரங்களாக பாதுகாப்புத் தரப்பினரின் கண்காணிப்பில் முடக்கப்பட்டு இருந்தது. கிராமத்தில் இருந்து வெளியேற மற்றும் அங்கு உள்நுழையத் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

பக்.2

## ஒரே குடும்பத்தில் ஐவருக்கு கொரோனா

கொழும்பு,ஏப்.13
இரத்தினபுரியில் ஆயிரத்து 47 பேர் 21 நாள்கள் வரை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே.பி. கன்னங்கர தெரிவித்துள்ளார்.

பக்.2

## பாதிப்பு 1,870,000 இறப்பு 115,500

வுகான், ஏப். 13
கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இன்று மாலை 5 மணி வரையிலான நிலவரத்தின்படி ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 500ஆக அதிகரித்தது.

பக்.2

## 3000 பேருக்கு கொரோனா?

கொழும்பு,ஏப்.13
தற்போது கண்டுபிடிக்கப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் தொடுகை மூலமாக சுமார் 3000 பேருக்குக் கொரோனா பரவியிருக்கலாம் என்றே கணிப்பிட வேண்டும் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர்

பக்.2

## யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு தொடரும்

### இடர்வலயங்கள் தவிர்ந்த பகுதிகளில் 16 ஆம் திகதி தளர்வு

கொழும்பு,ஏப்.13
கொரோனா தொற்றுப் பரவலில் இடர்வலயங்களாக இனம் காணப்பட்டுள்ள கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில், தற்போது அமுலில் இருக்கும் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில்

பக்.2

## இரண்டு வாரங்களுக்கு பொறுப்புடன் செயற்படுக

*இல்லையேல் பேரிழப்பு*

கொழும்பு,ஏப்.13
நாட்டில் கொரோனா வைரஸால் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, நாம் ஒவ்வொருவரும் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குப் பொறுப்புடன் செயற்படவேண்டும். இல்லையேல் நாம் பல இக்கட்டான நிலைமைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிவரும். பேரிழப்புக்களைக் கூடச் சந்திக்க வேண்டிவரும். இவ்வாறு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி எச்சரித்துள்

பக்.2

## தனிமைப்படுத்தப்பட்ட யாழ்.மாநகர பகுதிகள் நாளையுடன் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.13
யாழ்.மாநகரப் பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் நாளையுடன் விடுவிக்கப்படும் என்று சுகாதாரத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். காங்கேசன்துறை, மானிப்பாய் ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் தவிர்ந்த, ஏனைய அனைத்து இடங்களையும் புதுவருடத்துடன் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள்

பக்.2

# ஜூன் இறுதியில்

தேர்தல் தொடர்பான புதிய அறிவிப்பு மே மாதம் ஆரம்பத்தில் அறிவிக்கப்படின், தேர்தல் பரப்புரைக்கு 45 நாள்கள் வழங்கப்பட வேண்டும். அந்த நாள்களைக் கருத்திற் கொண்டு தேர்தல் திகதி தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிலைப்பாட்டை ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய பகிரங்கமாக அறிவிப்பார் எனவும் கூறப்படுகின்றது. (க-22)

## ஒரே குடும்பத்தில்...

இதேவேளை, இரத்தினபுரியில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட ஐவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களில் முதலில் இனங்காணப்பட்ட மாணிக்கக்கல் வர்த்தகரின் மனைவி குறித்த தொற்றிலிருந்து குணமடைந்துள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-22)

## யாழ்ப்பாணத்தில்...

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 6 மணிக்குத் தளர்த்தப்படும் ஊரடங்குச் சட்டம் அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு மீண்டும் அமுல்படுத்தப்படும்.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காக பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் உள்ளிட்ட நடைமுறைகள் மக்களின் நலனுக்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதனால் ஏற்படும் கஷ்டங்களைப் புரிந்துணர்வுடனும், பொறுப்புடனும் பொறுத்துக் கொள்ளுமாறு அரசாங்கம் மக்களிடம் கேட்டுள்ளது.

பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது, அத்தியாவசிய பொருள்களுடன் மட்டுப்படுத்திக் கொள்ளுமாறும், தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும் புத்தாண்டுக் காலப்பகுதியில் சம்பிரதாயங்கள் மற்றும் தொடர்புகளைக் குடும்ப உறுப்பினர்களுடன் மட்டுப்படுத்திக் கொள்ளுமாறும் வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய பணிகளுக்காக மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளை வினைத்திறனாகப் பேணும் வகையில் நடைமுறையில் உள்ள முறைமைகளைத் துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு எதிராகச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள காலப்பகுதியில் மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் வேறு பொருள்களை வீடுகளில் இருந்தே பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தொடர்ச்சியாக வழங்கலை மேற்கொள்ள அரசாங்கம் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

எந்த மாவட்டத்திலாயினும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் சிறு தேயிலை தோட்டங்கள், ஏற்றுமதி பயிர்கள் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட மக்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கண்டி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாகவே கருதப்படும். எவரும் இந்த கிராமங்களுக்கு உள்வருவதோ அல்லது வெளியேறுவதோ மறு அறிவித்தல் வரை முழுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது- என்றுள்ளது.(க-20)



# மீண்டது தாவடி

மக்களுக்குத் தேவையான உணவு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தன. அத்துடன் கிராமத்தில் தொற்று நீக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. சுகாதாரப் பகுதியினர் அங்கு தீவிர கண்காணிப்பில் இருந்தனர். தற்போது புது வருடத்தை முன்னிட்டு தாவடிக் கிராமம் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. (க-111)

## பாதிப்பு 1,870,000

கொரோனா வைரஸ் காரணமாக முழு உலகும் முடங்கியுள்ளது. தினமும் ஐந்தாயிரத்துக்கும் குறையாத உயிரிழப்புக்கள் சம்பவித்துக் கொண்டிருக்கின்றன. நேற்று மட்டும் 5,415 பேர் உயிரிழந்துள்ளனர். அமெரிக்காவில் மட்டும் 1,528 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இன்று மாலை 5 மணி வரையிலான நிலவரத்தின்படி ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 500ஆக அதிகரித்தது. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 18 லட்சத்து 70 ஆயிரமாக உள்ளது. (ம)

## 3000 பேருக்கு கொரோனா?

நவீன் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது 210 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 56 பேர் தற்போது வரை தொற்றிலிருந்து மீண்டு வீடு திரும்பியுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

வெறும் 30 நாள்களில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தி விட்டதாக அறிவித்தால் அது சாத்தியமாகாது.

தற்போது கண்டுபிடிக்கப்பட்ட 210 பேரிடம் இருந்து தொடுகை மூலமாக சுமார் 3000 பேருக்கு கொரோனா பரவியிருக்கலாம் என்றே கணிப்பிட வேண்டும். இது தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பவும் எதிர்பார்க்கின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில், புதுவருடத்தை வீட்டிலிருந்து குடும்ப உறுப்பினர்களுடன் கொண்டாடுமாறு அரசாங்கம் கேட்டுள்ளது.(க)

## இரண்டு வாரங்களுக்கு...

ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்கள் தமிழ் சிங்களப் புத்தாண்டில் பொறுப்புடன் செயற்பட்டு, நாடு எதிர்நோக்கியுள்ள அபாயத்தைக் குறைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பொறுப்புடன் ஒவ்வொருவரும் செயற்படும் பட்சத்தில், கொரோனா வைரஸ் பிடியில் இருந்து விடுபட்டு பிரச்சினை இல்லாமல் எதிர்காலத்தில் பயணிக்க முடியும். நாட்டின் எதிர்காலம் தொடர்பில் மிக முக்கிய பொறுப்பு பொதுமக்களிடம் இருக்கின்றது. எனவே, தீர்மானம் மிக்க எதிர்வரும் இரண்டு வாரங்களில் பொறுப்புடன் செயற்பட வேண்டியது அனைவரினதும் கடமையாகும். இல்லையேல் நாம் பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடலாம்- என்றார். (க-22)

## 136 கிலோ

பருத்தித்துறைக் கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமான படகை கடற்படையினர் சோதனை செய்த போது, படகில் கஞ்சா மீட்கப்பட்டது. சந்தேகநபர்கள் கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (க-26)

## வீட்டிலிருந்து பணிபுரியும்

வழங்கப்பட்டுள்ளது. வீட்டில் இருந்து பணிபுரியும் காலம் விடுமுறையாகக் கணிக்கப்பட மாட்டாது. அரச மற்றும் தனியார் துறை பிரதானிகளின் அறிவுரைக்கு அமைவாக, பணியாளர்கள் முடிந்தளவு வீட்டில் இருந்தவாறு வேலை செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரம், வங்கி, போக்குவரத்து மற்றும் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த, ஏனைய தரப்பினர் வீட்டில் இருந்து பணிபுரிய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(க)

## யாழ்.மாநகர பகுதிகள்...

மேற்கொள்ளப்படுகின்றன.

தடை செய்யப்பட்ட அனைத்துப் பகுதிகளும் விடுவிக்கப்படுகின்றபோதும், ஏனைய பிரதேச மக்களுக்கான ஊரடங்கு நடைமுறைக்குள் இப்பகுதி மக்களும் உள்ளடக்கப்படுவார்கள்.

அதேநேரம் காங்கேசன்துறை மற்றும் மானிப்பாயில் உள்ள 10 பேருக்கான தனிமைப்படுத்தல் அடுத்த வாரமே நிறைவுபெறும் எனவும் அதிகாரி தெரிவித்துள்ளார். (க-105)

# காத்திருப்போருக்கு 5,000 ரூபா 15ஆம் திகதி

கொழும்பு, ஏப். 13

காத்திருப்புப் பட்டியலிலுள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்கான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன.

இதற்குத் தேவையான நிதியை மாவட்டச் செயலாளர்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அத்தியாவசிய சேவைகளுக்கான ஜனாதிபதி செயலணி தெரிவித்துள்ளது.

கிராம மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என ஜனாதிபதி செயலணி குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் நாள்களில் கிராம மட்டத்தின் பரிந்துரைக்கமைய, பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வாகன உரிமையாளர்கள், ஓட்டோச் சாரதிகள் மற்றும் சுய தொழிலில் ஈடுபடுவோருக்கும் கொடுப்பனவு வழங்க எதிர்பார்த்துள்ளதாக அத்தியாவசிய சேவைகளுக்கான ஜனாதிபதி செயலணி மேலும் தெரிவித்துள்ளது. (த-22)

# சாவில் முடிந்த மோதல்

கொழும்பு,ஏப்.13

இருவருக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு முற்றியதில் மோதல் ஏற்பட்டது. அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கட்டுபொத தெலஹெரப் பகுதியில் நடந்துள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த 58 வயது நபரே உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்த நபர் கட்டுபொத வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். சந்தேக நபர் கைது செய்யப்பட் டுள்ளார். மேலதிக விசாரணைகளைக் கட்டுபொத பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (க)

# வதந்தி பரப்பிய எழுவர் கைது




கொழும்பு,ஏப்.13

சமூக ஊடகங்களில் பொய்யான தகவல்களைப் பரப்பிய குற்றச்சாட்டில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெலிகல, கட்டுகஸ்தோட்டை, வெலிமடை, கடவத்தை மற்றும் ராகம பிரதேசங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 3 நாள்களில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்க மைய கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் இதுவரை சமூக ஊடகங்களில் பொய்யான தகவல்களைப் பரப்பிய 16 பேர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)




# மருத்துவ உலகுக்கு மதிப்பளித்த கூகுள்

நியூயோர்க், ஏப். 13

மருத்துவ உலகுக்கு மதிப்பளிக்கும் விதமாக, தனது முகப்புப் பக்கத்தை இன்று வடிவ மைத்துள்ளது கூகுள். கொரோனா பெருந் தொற்றுக் காரணமாக உலகமே பெரும் இடருக்குள் தள்ளப்பட்டுள்ளது. சுமார் 19 லட்சம் பேரைத் தாக்கியுள்ள இந்த வைர ஸால் சுமார் ஒரு லட்சத்து 15 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனாவுக்கு எதிரான போராட்டத் தில் ஈடுபட்டுவரும் சுமார் 100க்கும் அதிக மான மருத்துவர்கள், தாதியர்கள் உயிரிழந் துள்ளனர். உலக சுகாதார நிறுவனத்தின் இறுதி அறிக்கையின்படி உலக அளவில் மருத்துவர்கள், தாதியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் என சுமார் 22 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் இந்தப் பெருந்தொற்றுக்கு எதிராகப் போரா டிவரும் மருத்துவப் பணியாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக தனது முகப்பை இன்று வடிவமைத்தது கூகுள். (ம)

# புது வருட சுபநேரத்திலாவது எழுதுகருவிகளை தூக்குங்கள்

## கல்வி அமைச்சர் மாணவர்களுக்கு அறிவுரை

கொழும்பு,ஏப்.13



புதுவருடத்தில் பணிகளை ஆரம்பிக்கும் சுப நேரத்தில், பேனை அல்லது பென்சில் போன்ற எழுதுகருவிகளை எடுத்து எழுதுமாறு கல்விய மைச்சர் டளஸ் அழகப்பெரும சகல மாணவர்களுக்கும் அறிவுரை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒரு புதிய ஆண்டின் விடியல் என்பது ஒரு புதிய வாழ்க்கை யைத் தொடங்குவதற்கான வாய்ப்பின் விடியல், சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டின் மிக முக்கியமான கலாசார மரபுகளில் ஒன்று, புனித காலங்களைக் கடைபிடிப்பது. அவற்றில், நல்ல நேரத்துக்கு ஏற்ப வேலையைத் தொடங்கு வது மாணவர்களுக்கு மிகவும் முக்கியம். எந்தவொரு, மொழி மதம், கலாசாரப்பிரிவினையும் இல்லாமல், நல்ல செயல்களை நினைவுகூருவதே மனிதகுலத் தின் அவசியம். இதுபோன்ற உன்னதமான மனித குலத்தின் தேவை, முன்னெப்போதையும் விட அதிகமாக உணரப்படும் தருணம் இது. இலங்கை மண்ணின் அனைத்து மாணவர் களையும் ஒரு புதையல் மதிப் புள்ள புத்தகத்தை எழுத அழைப்பு விடுத்திருந்தேன்.

இந்த புத்தாண்டின் போது, நான் ஒரு தந்தையாக உன்னத மான நேரத்துக்கு ஏற்ப இந்தப் புத்தகத்தை எழுதத் தொடங்க வேண்டும் என்று ஒரு அன் பான வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். ஒரு உன்னத விருப்பத்தை மனதில் கொண்டு, பிரகாசமான எதிர் காலத்துக்காக நம்பிக்கைய டன், இன்று இரவு 10.43 மணிக்கு சுப காரியத்தைத் தொடங்குங்கள்.

இந்த புத்தாண்டின் போது, எங்கள் தாய்நாட்டை அமைதியுடனும், செழிப்புட னும் ஒரு அழகான எதிர்கா லத்துக்கு, ஒரு விலைமதிப்பற்ற புத்தகமாக மாற்றுவதற்கு, உங்கள் விலைமதிப்பற்ற கதையை உங்கள் பேனா அல்லது பென் சிலைப் பிடித்து எழுத ஆரம் பித்துக் கொள்ளுங்கள். உங்கள் தாய்நாடு உற்சாகத்துடன் அழகான மற்றும் ஆரோக்கிய மான எதிர்காலத்துக்காக அயராது உழைக்கும் இந்த தருணத்தில் வாய்ப்பை இழக் காதீர்கள். நாளை பூக்கும் பத்தாயிரம் மாணவப் புத்தகங்களுடன் முழு நாட்டுக் கும், அதன் நறுமணத்தை பரப்புங்கள். உங்கள் அழகான செய்தியை உலகம் முழுவதும் கொடுப்போம். " விட்டுவிடா தீர்கள். அதை விடாமல் பிடிப்போம்" இந்த படைப்புத் திட்டத்துடன் புத்தாண்டுக் கான வேலையைத் தொடங்கு வோம்- என்றுள்ளது. (க)

# கிராமங்களுக்கும் பாய வேண்டும்!

## விலைக்கட்டுப்பாட்டு பகுதியினருக்கு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப். 13

கிளிநொச்சியில் விலைக்கட்டுபாட்டு பகுதியி னரின் நடவடிக்கைக்கு பொதுமக்கள் அமோக வரவேற்பளிக்கின்றனர். அவர்கள் கிராமங்க ளிலும் சோதனை நடத்தவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வாரம் மாவட்ட விலைக் கட்டுப்பாட்டு பகுதியினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை மூலம் அதிக விலையில் பொருள்கள் விற்பனை செய்தவர்கள் மற்றும் பொருள்களைப் பதுக்கி வைத்தவர்கள் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இந்த நடவடிக்கையை அவர்கள் கிராமங்களி லும் மேற்கொள்ளவேண்டும் என்று சமூக வலைத் தளங்கள் ஊடாகக் கோரிக்கை விடுக் கின்றனர். (த-214)

# 25,031 பேர் கைது

கொழும்பு,ஏப்.13

நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 25 ஆயிரத்து 31 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித் துள்ளது.

மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் இதுவரை யான காலப்பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தக் காலப்பகுதி யில் 6 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-22)

# முல்லை மருத்துவமனைக்கு அந்தணர் ஒன்றியம் உதவி

வவுனியா, ஏப். 13

முல்லைத்தீவு மருத்துவமனைக்கு வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் உதவிகளை வழங்கியுள்ளது.

கனடா இந்து குருமார் ஒன்றியத்தின் அனுசர ணையில் முல்லைத்தீவு அந்தணர் ஒன்றியத் தின் ஊடாக இந்த உதவிகள் வழங்கப்பட் டன. மருத்துவமனைப் பயன்பாட்டுக்காக சுவாசக் கவசங்களை வழங்கியுள்ளனர்.

அந்தணர் ஒன்றியத்தின் உப தலைவர் பிரபாக ரகுருக்கள் தலைமையில் சி.திவாகரக் குருக் கள், ஜெ.செந்தில்நாதக் குருக்கள் ஆகியோர் பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரிகளிடம் அவற்றை வழங்கினர். (த-110)

## தனிமைப்படுத்தப்பட்ட 60 பேர் வெளியேற்றம்

கொழும்பு, ஏப். 13

தனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்ட 60 பேர் முகாமிலிருந்து வெளியேறவுள்ளனர் என்று பாதுகாப்புப் படைகளின் பதில் தலைமை அதிகாரியும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இவர்களில் 15 பேர் வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்கு திரும்பியவர்கள். அவர்கள் கல்கந்த புனானை தனிமைப்படுத்தல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, பண்டாரகம பகுதியிலுள்ள முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 20 பேர் வீடுகளுக்குத் திரும்பவுள்ளனர்.

அத்துடன் , நீர்கொழும்பு மருத்துவமனை சுகாதார ஊழியர்கள் 25 பேரும் தனிமைப்படுத்தல் முகாம்களிலிருந்து வெளியேறவுள்ளனர் என்றும் ராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார். இதே வேளை ஆயிரத்து 506 பேர் தொடர்ந்தும் முகாம்களில் தங்க வைக்கப்பட்டு கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவித்தார். (த-114)

## அதி அபாய வலயம்: மீள்கிறது இரத்தினபுரி

கொழும்பு,ஏப்.13

கொரோனா வைரஸ் பரவலால் அதி அபாய வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டிருந்த இரத்தினபுரி மற்றும் பெல்மதுளை ஆகிய பொலிஸ் பிரிவுகள், அபாய வலயத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளன. சுகாதார, பாதுகாப்புத் தரப்பினர் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இரத்தினபுரி பகுதியில் மாணிக்கக் கல் வர்த்தகர் ஒருவரும், அவரது குடும்பத்தாருமாக 5 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டதை அடுத்து, குறித்த இரு பொலிஸ் பிரிவுகள் அதி அபாய பகுதிகளாகப் பெயரிடப்பட்டன.

மேலும், கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலால் அதி அபாய பிரதேசங்களாக மேல் மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களும், புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களும் தொடர்ந்தும் நீடிக்கின்றன. அந்தப் பகுதிகளில் ஊரடங்கு மறு அறிவித்தல் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 45 தொற்றாளர்களும், களுத்துறையில் 32 தொற்றாளர்களும், கம்பஹாவில் 23 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டிருந்தனர். இதனைவிட புத்தளத்தில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்கள் எண்ணிக்கை 34 ஆகும். இவ்வாறான நிலையில் அதிக தொற்றாளர்களைக் கொண்டுள்ள கொழும்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் பரிசோதனைகளை முன்னெடுக்க நடமாடும் பரிசோதனைக் கூடமொன்று தயார் செய்யப்பட்டுள்ளது. கொழும்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனை இந்த நடமாடும் பரிசோதனைக் கூடத்தைத் தயார் செய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மீன்பிடிக்க சென்றவர் சடலமாக நேற்று மீட்பு

ஹற்றன்,ஏப்.13

காசல் நீர் தேக்கத்தில் மீன் பிடிக்க சென்றவர் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

நண்பர்களோடு மீன் பிடிக்கச் சென்ற இளைஞன், நீர்த்தேக்கத்தில் நீராடிக் கொண்டிருந்த போது, நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் ஒரு பிள்ளையின் தந்தை என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

## மேல் மாகாணத்துக்கு ஆளுநரால் நிவாரணம்

கொழும்பு,ஏப்.13

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் உள்ளிட்ட சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாமல், மேல் மாகாணத்தில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளவர்களுக்கு, உதவும் பொருட்டு மேல் மாகாண ஆளுநரினால் நிவாரண சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நிவாரண உதவிகள் கிடைக்கப்பெறாத மற்றும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ள தரப்பினர் மேல் மாகாண ஆளுநரின் நிவாரண சேவை மத்திய நிலையத்தின் 011 2092720 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி தெரிவிக்க முடியும் என்று அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. (க-22)

## பருப்புக்கு கட்டுப்பாடில்லை!

யாழ்ப்பாணம், ஏப். 13

கிளிநொச்சி மாவட்டத்துக்கு எடுத்து வரப்பட்ட பொருள்கள் மாவட்டச் செயலகத்தால் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிலையில் பருப்புக்கு மட்டும் கட்டுப்பாட்டு விலையை விடவும் அதிகமாகவே விலையை நிர்ணயிக்கவேண்டியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு சீனி , பருப்பு என்பன தலா 25 ஆயிரம் கிலோ கிராமும், ரின் மீன் 25 ஆயிரம் என்பனவற்றுடன் 2 ஆயிரத்து 500 கிலோ வெள்ளைப்பூடு என்பன எடுத்து வரப்பட்டன.

ஆனால் பருப்பு கொழும்பிலேயே 65 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டதனால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 66 ரூபா வீதம் வழங்கப்படுகின்றது. அதனால் அவற்றைக் கட்டுப்பாட்டு விலையான 65 ரூபாவை விடவும் அதிகமாக, 70 ரூபாவுக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலைமையே காணப்படுகின்றது. இதேநேரம் வெள்ளைப் பூடு கூட்டுறவுச் சங்கங்களுக்கு 450 ரூபாவுக்கும், மீனரின் 99 ரூபாவுக்கும், சீனி 116 ரூபா 25 சதத்துக்கும் வழங்கப்பட்டுள்ளன.இதனால் அவை நிர்ணய விலைக்கே அங்கத்தவர்களுக்கு பங்கீட்டின் அடிப்படையில் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-105)

## மழைக்குச் சாத்தியம்

கொழும்பு,ஏப்.13

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் இன்று மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சில இடங்களில் 50 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகள் அவ்வப்போது சாதாரண முதல் மிதமான கொந்தளிப்பாகக் காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.(க)

## தனிமைப்படுத்தலில் இருந்து தப்பியோடியோர் கைதாகினர்

கொழும்பு, ஏப். 13

ஹப்புத்தளை தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் கொரோனா தொற்று சந்தேகத்தில் இணைக்கப்பட்டிருந்த மூவர் தப்பியோடி, லொறி ஒன்றில் பயணித்துக்கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு, பெரகல நகரில் அவர்கள் பயணித்துக்கொண்டிருந்தபோதே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரும், தற்போது தியத்தலாவை இராணுவ முகாமில் உள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரையும் 14 நாள்கள் வரை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-114)

## தோப்புக்கரணம் போட வைத்த இரு பொலிஸார் இடைநிறுத்தம்

கொழும்பு, ஏப். 13

கொழும்பு டார்லி வீதியில் நேற்று ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலிருந்த நேரத்தில் வீதியில் சென்றுகொண்டிருந்த சிலரைப் பிடித்து தோப்புக்கரணம் போடவைத்த கொழும்பு போக்குவரத்துப் பிரிவின் பொலிஸ் அலுவலர்கள் இருவர் சேவையிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளனர். இந்தியப் பொலிஸாரின் பாணியில் செயற்பட முனைந்த குறித்த இருவர் தொடர்பிலும் மனித உரிமைகள் ஆர்வலர்கள் தெரிவித்த விமர்சனங்களையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-22)

# ஆடம்பரங்களைத் தவிர்த்து புத்தாண்டை கொண்டாடுங்கள்

## வாழ்த்துச் செய்தியில் மஹிந்த



கொழும்பு,ஏப்.13

வீட்டில் சம்பிரதாயச் சடங்குகளை நிறைவேற்றி, எளிமையாக, ஆடம்பரமின்றி புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாடுங்கள்.

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பில் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மிகவும் அபாயமான நிலைமையில் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்தப் புத்தாண்டை சுகாதார ரீதியான எச்சரிக்கைகள் மற்றும் சிபார்சுகளுக்கு உட்பட்ட வகையிலேயே கழிக்க வேண்டியுள்ளது.

தேசத்தின் இருப்புக்காக பொதுமக்களின் சுகாதார நலனுக்கு ஏற்புடையவாறு, விதிக்கப்பட்ட சட்டதிட்டங்கள் மற்றும் தடைகள் புத்தாண்டு நாள்களிலும் அமுல்படுத்தப்படுகின்றன என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்த சுகாதார ரீதியான தடைகள் மற்றும் சிபார்சுகளின் மத்தியிலும் புத்தாண்டின் அர்த்தம் அழிந்து விடாது பேணிக் கொள்ள முடியும்.

சிங்கள, தமிழ் புத்தாண்டு இனங்களுக்கு மத்தியில் ஒற்றுமை மற்றும் சகவாழ்வை எடுத்தியம்புகிறது. ஒரே சந்தர்ப்பத்தில் வேலை செய்யும் எமக்கு தேசத்தின் ஒற்றுமையை வெளிப்படுத்த முடியும். இந்த எளிமை, ஆடம்பரமின்மை தேசத்தின் இருப்புக்குக் காரணமாக அமைந்துள்ளது என்பது வரலாற்றை ஆராயும் போது தெளிவாகிறது. பல நூறு ஆண்டுகளாக தொடர்ச்சியாகக் கடைப்பிடித்து வந்த பழக்கவழக்கங்கள் மூலம் வெளிப்பட்ட தேசிய உணர்வுகளின் பெறுமானத்தை இன்று முன்னெப்போதுமில்லாதவாறு உணர்கிறோம். சம்பிரதாய ரீதியாக நாட்டினர் மத்தியில் காணப்பட்ட அந்த பிணைப்பு, ஒற்றுமை, மக்கள் கலாசாரத்தின் பலம் காரணமாகவே முழு உலகையும் திகைப்படையச் செய்த ஆதரவற்றதாக மாற்றிய தொற்று நோய்க்கு நாம் சிறப்பாக முகங்கொடுக்கிறோம். எனவே இம்முறை புத்தாண்டை எளிமையாகவும், ஆடம்பரமின்றியும் உங்களது குடும்ப அங்கத்தவர்களுடன் மாத்திரம் கொண்டாடுங்கள்- என்றுள்ளது. (க)

# போதைப் பொருள்களை அள்ள செய்மதித் தரவுகளே உதவின

கொழும்பு, ஏப். 13

பல மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோய்ன் உட்பட்ட போதைப்பொருள்களை ஆழ்கடலில் வைத்து கைப்பற்ற தமக்கு செய்மதித் தரவுகளே உதவின என்று இலங்கைக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

சுமார் 3ஆயிரத்து 700 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப்பொருள்கள் இந்த வாரத்தில் கடலில் வைத்து கைப்பற்றப்பட்டன. இதன்போது வெளிநாட்டு கப்பலில் இருந்த 7 பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர் என்று இலங்கைக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இந்தநிலையில் குறித்த கப்பல் விரைவில் இலங்கையின் கரைக்கு கொண்டு வரப்படும் என்று கடற்படையினர் அறிவித்துள்ளனர். ஏற்கனவே கடந்த வாரங்களில் சுமார் 12.5 பில்லியன் ரூபா பெறுமதியான போதைப் பொருள்களை இலங்கை கடற்படையினர் ஆழ்கடலில் வைத்து கைப்பற்றியிருந்தனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (த)

# இன்னும் 32 பேர் ஒலுவில் முகாமுக்கு!

## குருதி மாதிரிகள் பரிசோதனைக்கு

கொழும்பு, ஏப். 13

ஜா எலப் பகுதியில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுடன் பழகிய மேலும் 32 பேர் இனங்காணப்பட்டு ஒலுவில் கடற்படை முகாமிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். கொரோனா தொற்று சந்தேகத்தில் இவர்கள் 21 நாள்களுக்குத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (த-22)



# உன்னதமானவர்களில் பேராயர் நிக்லஸும் ஒருவர்

## ஜனாதிபதி இரங்கலுரை

கொழும்பு, ஏப். 13

தெய்வத்துக்காகவும் இலங்கை வாழ் கத்தோலிக்க மக்களின் சமய, சமூக நன்மைக்காகவும் தனது வாழ்வை அர்ப்பணித்த உன்னதமானவர்களில் கொழும்பு மறைமாவட்டத்தின் 7ஆவது பேராயர் கலாநிதி நிக்லஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை ஒருவர். அவர் காலமானதையறிந்து கவலையடைகின்றேன் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தனது இரங்கலுரையில் குறிப்பிட்டுள்ளார்.

"இங்கிலாந்து, இத்தாலி உள்ளிட்ட பல நாடுகளில் உயர் சமய கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் இறையியல் மற்றும் தத்துவத் துறையில் பட்டம் பெற்றுள்ள அவர் தனது வாழ்வை இறைவனின் விருப்பத்துக்காக அர்ப்பணித்திருந்தார். கத்தோலிக்க மக்களிடத்தில் மட்டுமன்றி நாட்டிலுள்ள அனைத்து சமயத்தவர்களினதும் கௌரவத்தைப் பெற்றிருந்த அவர், இளவயதிலேயே கொழும்பு மறை மாவட்டத்தின் 7ஆவது பேராயர் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டு சுமார் இருபத்தைந்து வருடங்கள் பதவி வகித்தார். அவர் சிறந்த நிர்வாகி. என்று இன்று விடுத்த இரங்கலுரையில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (த)

# குத்தரிசிக்கு நிர்ணயவிலை 125 ரூபா

## மாவட்டச் செயலர் சிபார்சு



யாழ்ப்பாணம்,ஏப்.13

குத்தரிசி 125 ரூபாவாகவும், உடையல் 110 ரூபாவாகவும், தீட்டல் 115 ரூபாவாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அரிசி வகைகளுக்கான விலை நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்டச் செயலகத்தில், மாவட்டச் செயலர் க.மகேசன் தலைமையில் இன்று நடைபெற்றபோதே விலை நிர்ணயம் தொடர்பில் முடிவெடுக்கப்பட்டது.

தேசிய அளவில் அரிசி வகைகளுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில், அவற்றுக்குள் உள்ளடக்கப்படாத மொட்டைக்கறுப்பன், ஆட்டக்காரி அரிசி வகைகள் யாழ்.மாவட்டத்தில் அதிக விலைக்கு விற்கப்படுவதைத் தடுப்பது தொடர்பாக சந்திப்பில் ஆராயப்பட்டது.

அரிசி ஆலை உரிமையாளர்கள், வர்த்தகர்கள் எனப் பலர் கலந்துரையாடல் கலந்து கொண்டனர். இதில் மாவட்டச் செயலர் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில் 90 தொடக்கம் 95 வீதமான மக்களால் நுகரப்படும் மொட்டைக்கறுப்பன், ஆட்டக்காரி போன்ற அரிசி வகைகளுக்கு விலை நிர்ணயம் செய்யப்படவில்லை. இதனால் 140 ரூபா தொடக்கம் 145 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

குறித்த இருவகை அரிசிக்கும் மாவட்ட ரீதியாக விலை நிர்ணயம் செய்ய வேண்டியுள்ளது. தேசிய அளவில் அரிசிக்கான நிர்ணய விலைகளை மிஞ்சாத வகையில் மேற்படி இரு நெல்வகைகளிலும் குத்தரிசி 125 ரூபாவாகவும், உடையல் 110 ரூபாவாகவும், தீட்டல் 115 ரூபாவாகவும் விலை நிர்ணயம் செய்யலாமென சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் தங்களுடைய சட்டத்தின் பிரகாரம் அங்கீகரித்தால் மாவட்டத்தில் அரிசி விலை நிர்ணயம் செய்யப்படும். ஆகக் குறைந்தது ஒரு மாதத்துக்காகவும் இதனை நடைமுறைப்படுத்துமாறு பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபையிடம் கேட்டிருக்கின்றோம்.

மேலும் நெல் மூடை 5000 தொடக்கம் 5100 ரூபாவைத் தாண்டிக் கொண்டிருக்கும் நிலையில், 3700 ரூபாவுக்குள் அதன் விலையை கட்டுப்படுத்த வேண்டும் என்று ஆலை உரிமையாளர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்- என்றார். (க-20)

# பரிசோதனைகளை விரிவாக்க வேண்டும்

### *அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்*

*கொழும்பு,ஏப்.13*

கொரோனா பிடியிலிருந்து இலங்கையை மீட்டெடுக்க பரிசோதனைகளை விரிவு படுத்த வேண்டும். எதிர்காலப் பாது காப்பை உறுதிப்படுத்த வேண்டிய தருணம் இதுவே ஆகும்.

இவ்வாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளது.

சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரச வைத்திய அதிகாரிகளின் சங்கத்தால் கடந்த மாதம் வெளியிடப்பட்ட அறிக்கை யானது, இன்று முழு நாட்டையும் காப்பாற்றிய தீர்க்கமான அறிக்கை யாகியுள்ளது.

இத்தாலி, இங்கிலாந்து உட்பட ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் உயிர்த்தெழுந்த ஞாயிறு தினத்தைக் கொண்டாட முடியாமல் இன்று மரண வீடாகக் காட்சியளிப்பதற்குக் காரணம், மார்ச் மாதத்தில் அவர்கள் எடுக்க வேண்டிய தீர்மானங்களைச் சரியாக எடுக்காமையே ஆகும்.

எமது பரிந்துரைகளைச் சரியாக செவிமடுத்து மார்ச் மாதத்தில் ஒரு நாடு எனும் ரீதியில் இலங்கை அரசும், சுகாதாரத் துறையும் எடுத்த தீர்மானங்களால் இன்று எமது மக்களுக்குத் தம் இல்லங்களிலிருந்து சிங்கள - இந்து புதுவருடத்தைக் கொண்டாடக் கூடியதாக உள்ளது.

தற்போது நிலவும் நிச்சயமற்ற தன்மையை இல்லாது செய்வதற்காக நாளொன்றுக்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் எண்ணிக்கையை இயன்றளவு விரைவில் விரிவாக்க வேண்டும். இது எதிர்காலப் பாது காப்பை உறுதிப்படுத்தும். இலங்கை யைப் படிப்படியாக சுமூக நிலைக்கு இட்டுச் செல்வதற்கும் வழி கிடைக்கும். பிறக்கும் சிங்கள - தமிழ் புதுவருடமானது உங்கள் அனைவருக்கும் நோய்நொடி களற்ற ஆரோக்கியமும் பாதுகாப்பும் கிடைக்கும் இனிய புதுவருடமாக ஆகட்டும்- என்றுள்ளது. (க)



# சறுக்கி விழுந்து தாதி உயிரிழப்பு

*கொழும்பு,ஏப்.13*

கண்டி தெல்தெனிய ஆதார வைத்தியசாலையில் கடமை யாற்றும் சச்சித்ரா என்ற தாதிய உத்தியோகத்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

அவர் கடமையின் போது சறுக்கி விழுந்து உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவரது குடும்பத்தினருக்கு இலங்கை தாதிய உத்தியோகத்தர்கள் குழுமம் ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவித்துள்ளது. (க)

# போதைப் பொருள் வியாபாரிகள் கைது

*அம்பாறை, ஏப்.13*

அம்பாறை நிந்தவூர் பிரதேசத்தில் ஹெரோயின் போதைப் பொருளைப் பொதி செய்துகொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டில், போதைப் பொருள் வியாபாரிகள் என்று சந்தேகிக்கப்படும் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிட மிருந்து 54 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது என்று சம்மாந் துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து நிந்தவூர் 4ஆம் பிரிவு கடற்கரை வீதியில் உள்ள வீடொன்று சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப் பதிகாரி வை. விஜயராஜா தலை மையிலான பொலிஸார், இராணு வத்தின் உதவியுடன் சுற்றி வளைக்கப் பட்டது.

இதன் போது ஹெரோயினை விற் பனை செய்வதற்காகப் பொதி செய்து கொண்டிருந்த போதே மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை 3 நாள் பொலிஸ் தடுப்பில் வைத்து விசா ரணை செய்வதற்கு நீதிமன்றத்தில் அனுமதி பெற்று விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலி ஸார் தெரிவித்தனர். (ப-150)



# ஊரடங்கிய பொழுதில் இயற்கையும் உயிரினங்களும்

*திருகோணமலை, ஏப். 13*

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக ஊரடங்கு நடைமுறையில் உள்ளது. அதனால் மக்கள் வீடுகளில் முடங்கியுள்ளனர். இந்த நிலை யில், திருகோணமலை மாவட்டத்தில் திருகோண மலை நகர், மூதூர், கிளிவெட்டி, தம்பலகா மம், வெருகல் பகுதியில் இயற்கையின் அமைதி யையும், உயிரினங்களின் சுதந்திர நடமாட்டத்தை யும் பல இடங்களிலும் அவதானிக்க முடி கின்றது. (த-40)





# அரியாலை ஆராதனையில் பங்கெடுத்தோரின் தனிமைப்படுத்தல் நிறைவு

*யாழ்ப்பாணம்,ஏப்.13*

அரியாலையில் அமைந்துள்ள தேவாலயத்தில் ஆராதனையில் கலந்து கொண்டவர்களுக்கு கொவிட்19 தொற்று ஏற்பட்டு இருக்கலாம் என்ற சந்தேகத்தில், பெரும்பாலானோருக்கான சுய தனிமைப்படுத்தல் செயற்பாடு கள் ஆரம்பிக்கப்பட்டன.

அவர்கள் தத்தமக்குரிய சுய தனிமைப்படுத்தல் காலத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தி ருப்பதைத் தொடர்ந்து அவர்க ளுக்கான சுய தனிமைப்படுத்தல் கள் இன்று காலையுடன் முடி வுக்குக் கொண்டு வரப்பட்டுள் ளது. இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது:

யாழ்ப்பாணத்தின் முதலாவது கொவிட்19 நோயாளியின் வதிவிடத்தைச் சூழ தாவடிப் பகுதியில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட நடமாட்டத்துக்கான கட்டுப்பாடுகள் மற்றும் சுய தனிமைப்படுத்தல்கள் இன்று காலையுடன் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

தேவாலயத்துக்கு சுவிட்சர்லாந்தி லிருந்து வருகைதந்து தொற் றுக்கு மூல காரணமாக இருந்தவ ருடன் தனிப்பட்ட வகையில் நெருங்கிய தொடர்பிலிருந்தவர் கள் என்ற வகையில் 20 பேர் காங்கேசந்துறையில் தனிமைப்ப டுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

அவர்களில் 6 பேருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்ட தால், அவர்கள் 6 பேரும் உரிய சிகிச்சைக்காக அனுப்பி வைக் கப்பட்டனர். ஏனைய 14 பேருக்கான தனிமைப்படுத்தல் காலம் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்களுக்குரிய ஆய்வு கூடப் பரிசோதனைகளும் மீளச் செய்யப்படவுள்ளன.

தேவாலய நிகழ்வுகளால் தனி மைப்படுத்தப்பட்ட ஏனையோ ருக்கும் படிப்படியாக ஆய்வு கூடப் பரிசோதனைகள் செய் யப்பட்டு வருகின்றன- என் றார். (க)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 13.04.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.